1998/4

<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

கல்வி தகுதி - பொதுப் பணிகளில் நியமனம் செய்ய மாநில தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சிக் குழுவால் (State Board of Technical Education & Training) வழங்கப்படும் பொறியியல் கருவி பட்டயப் படிப்பை (Diploma in Tool Engineering) அங்கீகாரம் செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசாணை (நிலை) எண்.86 நாள் 17.04.1998.

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 20.12.1993.
2. திண்டுக்கல்லிலுள்ள பொறியியல் கல்வி நிலைய முதல்வரது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலருக்கு முகவரியிட்ட கடித எண்.739/ பி/94, நாள் 22.08.1994.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரது கடித எண்.6190/பி.டி-டி3/93, நாள் 06.03.1996, கடித எண்.5486/ஆர்.என்.டி-ஏ5/96, நாள் 24.01.1997 மற்றும் கடித எண்.5486/ஆர்.என்.டி-ஏ5/96, நாள் 29.10.1997.

--------------

<u>ஆணை:</u>

பார்வை இரண்டில் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் திண்டுக்கல்லிலுள்ள பொறியியல் கருவி நிலையத்தின் (Institute of Tool Engineering) முதல்வர், அவர்களது கல்வி நிறுவனம் மாநில தொழிற்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி குழுவுடன் (State Board of Technical Education and Training) இணைக்கப்பட்டது எனவும், அவர்களது கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் பொறியியல் கருவி பட்டய படிப்பை (Diploma in Tool Engineering) படித்து தேறிய மாணவர்களை கட்டிட பொறியியல் (Civil Engineering Diploma) மற்றும் இயந்திர பொறியியல் (Mechanical Engineering Diploma) பட்டய படிப்பிற்கு நிகராக கருதி உதவி பொறியாளர் (Junior Engineer) பதவிக்கு தகுதியாக கருதி ஆணைகள் வெளியிடுமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளரைக் கேட்டுள்ளார்.

2. திண்டுக்கல்லிலுள்ள பொறியியல் கருவி நிலையத்தின் முதல்வரது (Institute of Tool Engineering, Dindigul) அங்கீகாரம் குறித்த கோரிக்கை இதற்கென அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 20.12.1993ன் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் அமைக்கப்பட்ட குழுவின் (Committee) முன்னர் பரிந்துரைக்காக வைக்கப்பட்டது.

3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் 03.01.1996 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் மாநில தொழில் நுட்ப கல்வி மற்றும் பயிற்சிக் குழுவால் (State Board of Technical Education and Training) வழங்கப்படும் பொறியியல் கருவி பட்டயப் படிப்பை (Diploma in Tool Engineering) பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளிக்க குழு தீர்மானித்து அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

4. குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனை செய்து மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவால் வழங்கப்படும் பொறியியல் கருவி பட்டய படிப்பை (Diploma in Tool Engineering) பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகரிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.பிரகாஷ்,
அரசு செயலாளர்

பெறுநர்

1. அனைத்து செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை - 9.
2. அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்,
3. முதல்வர், பொறியியல் கல்வி நிலையம், திண்டுக்கல் -6.
4. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை -2.

நகல்

1. அனைத்து தலைமைச் செயலக துறைகள், சென்னை-9.
2. அனைத்துப் பிரிவுகள், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
3. முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்